# Form.No.53
## (See Rule 42)
## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII, Cr.P.C)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

Calender
Miscellaneous STC.No. 4 of 2016
Priliminary Register
Sessions

Prosectuion PW8

Depostitions of Prosecution witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கதிரவன் ( காவல் ஆய்வாளர்) |
| Father name | : | திரு. மணிமாறன் |
| Village | : | திருப்பாதிரிப்புலியூர் |
| Taluk | : | |
| Calling | : | PW 8 ( LW10) |
| Religion | : | |
| Age | : | |

**3, 5** எதிரிகள் ஆஜர்**. 1, 2, 4** எதிரிகள் ஆஜரில்லை**.** பிரிவு **355** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.** அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் **. 1** முதல் **5** எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**.**

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act
(Central Act 44 of 1969) on the 06th day of July 2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பாதிப்புலியூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.05.2015 ந் தேதி நான் காட்டுமன்னார்கோயில் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது தலைமைக் காவலர் திரு. கிருஷ்ணராஜ் என்பவர் பழஞ்சநல்லூரைச் சேர்ந்த பொன்னுசாமி மனைவி சாந்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று 13.05.2015 அன்று இரவு 10.00 மணிக்கு நிலைய குற்ற எண்.106/2015 என்ற எண்ணில்

இ.த.ச.பிரிவுகள் 147, 294(பி), 323, 506(1)–ன் படி வழக்கு பதிவு செய்து பார்வைக்கு வைத்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.6/அ.சா.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 14.05.2015 அன்று காலை 8.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் பிரதாப், அண்ணாதுரை ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் **அ.சா.ஆ.7/அ.சா.8** மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.8/அ.சா.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் சாந்தி, வாசுகி, ராமலிங்கம், வளர்மதி, சத்தியலட்சுமி, பாக்கியலட்சுமி, பிரதாப், அண்ணாதுரை ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்து சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் தலைமறைவாக இருந்தனர். பின்பு வழக்கில் காயம்பட்ட சாட்சி சாந்திக்கு மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. மோகன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். அவர் அளித்த காயச்சான்றின்படி காயமானது சொற்பகாயம் என கருத்துரு வழங்கப்பட்டது. பின்பு எதிரிகள் நீதிமன்ற பிணையில் சென்றதால் 07.06.2015 அன்று எதிரிகள் மீது 147, 294(பி), 323, 506(1) ன் படி இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன்.

**1** முதல் **5** எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 09.05.2015 அன்று இரவு 18.00 மணி என்றால் சரிதான். காவல்நிலையத்தில் தகவல் கிடைக்கப்பெற்ற நேரம் 13.05.2015 அன்று 22.00 மணி என்றால் சரிதான். புகார் நேரடியாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகாரில் 13 வது வரியில் மிரட்டல் விடுத்தார்கள் என இடைச்சொருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரின் தேதியும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரின் இறுதியிலும் 12 என எழுதிவிட்டு 13 என தேதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அ.சா.1 சாந்தி எனது விசாரணையில் சென்ற வருடம் 5ம் மாதம் மாலை 4

மணிக்கு பாண்டியன், மதி, ஜெயா, சுதா ஆகியோர் என்னை கட்டைக்கழியால் அடித்தனர், முடியை பிடித்து இழுத்தார் என தெரிவித்துள்ளாரா என்றால் இல்லை. தேவிடியா குச்சிகாரி என்று அசிங்கமாக திட்டி அடித்தனர், எனது மகளையும் அடித்தனர் என்று எனது விசாரணையில் தெரிவித்ததாரா என்றால் மகளை அடித்ததாக தெரிவிக்கவில்லை. பேச்சுமூச்சு இல்லாததாக தெரிவித்ததாரா என்றால் இல்லை. தான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் வந்து வாக்குமூலம் பெற்றதாக எனது விசாரணையில் தெரிவித்தாரா என்றால் இல்லை.

அ.சா.2 ராமலிங்கம் எனது விசாரணையில் 5 வது மாதம் சித்திரை மாதம் மாரியம்மன் கோயிலில் திருவிழா நடந்தது என்றும், அப்போது எதிரிகள் அனைவரும் தன்னை மறித்தனர் என்றும், அவர்கள் சாந்தி வீட்டிற்கு அடிப்பதற்காக வந்தனர் என்றும் தான் அடிக்க வந்தவர்கள் மேல் புகார் கொடுக்க சென்றேன் என்றும், எதிரிகள் சாந்தி வீட்டிற்கு சென்று அடித்துவிட்டனர் என்றும், எதிரிகள் அடிக்க வந்தது குறித்து தானும், சாந்தியின் பெரிய மகனும் புகார் அளிக்க சென்றதாகவும் காவல்துறையினர் காமராஜ் என்ற பையனை தங்கள் ஊரில் இருந்து சம்பவம் குறித்து விசாரிக்க அழைத்து வந்ததாகவும், அதனால் காமராஜை எப்படி காவல்நிலையத்திற்கு அழைத்து செல்லலாம் என்று சொல்லி பாண்டியன், சுதா, மதியழகன், வள்ளி, வசந்தா ஆகியோர் காமராஜின் உறவினர்கள் சாந்தியை தாக்கியதாக, அடித்துவிட்டதாக எனக்கு தகவல் வந்து நானும் காவல்நிலையத்தில் இருந்து போலீசாரும் தங்கள் ஊருக்கு சென்றதாகவும், அப்போது சாந்தி வீட்டு வாசலில் மயங்கி கிடந்ததததாகவும், அவருக்கு இடது காலில் காயம் ஏற்பட்டது என்றும், அப்போது தான் விசாரிக்க சாந்தியை ஆம்புலன்சில் ஏற்றக் கூடாது என ராஜேந்திரன், பாண்டியன், நன்னி, அஞ்சாம்புலி, சங்கர்லால், பாண்டியனின் இரு மகன்கள், மற்றும் நாகராஜ் ஆகியோர்கள் ஆம்புலன்சை வழிமறித்து அடித்ததாக கூறியதாகவோ, தங்களை பார்த்ததும் அங்கிருந்தவர்கள் ஓடி சென்றுவிட்டதாகவோ எனது விசாரணையில் தெரிவித்துள்ளனரா என்றால் இல்லை.

அ.சா.3 பாக்கியலட்சுமி எனது விசாரணையில் கோயில் திருவிழாவிற்கு தனது அம்மா சாந்தி வரச்சொன்னதாகவோ தான் சென்ற வருடம் 5 வது மாதம் வந்திருந்ததாகவோ தனது வீட்டிற்கு தனது அண்ணன் சிலம்பரசன் தூங்கி

கொண்டிருந்ததாகவோ அப்போது காமராஜ் என்பவர் வெடியினை வீட்டிற்குள் தூக்கி போட்டுவிட்டார் என்றோ வெடித்ததில் வீடு முழுவதும் புகைமூட்டமாகவும், குப்பையாகவும் ஆனதாகவோ இதுபற்றி தனது அண்ணன் சிலம்பரன் காமராஜிடம் கேட்டபோது எனது அண்ணன் காமராஜை அடித்துவிட்டதாக கூறி ஆட்களை அழைத்து வந்துவிட்டார் என்றோ, திருவிழாவிற்கு வந்தவர் அவரை தடுத்து நிறுத்திவிட்டார் என்றோ பயந்து கொண்டு தனது அண்ணனை வெளியூருக்கு அனுப்பி விட்டதாகவோ அதன் பிறகு மறுநாள் ஊர் பஞ்சாயத்தில் பிரச்சனையை பேசி தீர்த்துக் கொள்ளலாம் என தெரிவித்ததாகவோ சிலம்பரசனை அழைத்து வருமாறு சொன்னதாவோ, அதன் பிறகு அன்று மாலை 6 மணிக்கு 1 , 2 எதிரிகள் தனது வீட்டிற்கு வந்து தனது அம்மாவிடம் மகனை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய் என்று திட்டி கையில் கழியுடன் மிரட்டியதால் தனது தாயார் தனது வீட்டிற்கு வந்துவிட்டார் என்றோ, இது குறித்து அன்று மாலையே தனது தயாார் காட்டுமன்னார்கோயில் காவல்நிலையத்தில் புகார் அளித்ததாகவோ மறு நாள் தனது அண்ணன் சிலம்பரசன் வீட்டிற்கு வந்ததும், 1, 2 எதிரிகள் பழஞ்சநல்லூர் வீட்டில் புகுந்து ஏன் புகார் கொடுத்தாய் என்று தனது தாயை கழி மற்றும் இரும்பு பைப்பால் அடித்தார் என்றோ தனது அண்ணன் காவல்நிலையத்தில் இருந்ததால் தான் மற்றும் வீட்டின் வெளியே நின்று இருந்ததாகவோ மதி என்பவர் கையில் கழியுடன் இருந்ததாகவோ, சுதா என்பவர் தனது வீட்டில் இருந்து இரும்பு பைப்பால் தன் தாயை அடித்ததாகவோ, வசந்தா என்பவர் வாசற்படியில் இருந்து விளக்குமாற்றை எடுத்து வந்து தன் தாயை அடித்ததாகவோ, பாண்டியன், மதி, ஜெயா, வசந்தா, வள்ளி , ஜெயசுதா ஆகியோர் தன் தாயை வீடு புகுந்து அடித்ததாகவோ, தனது கணவருக்கு தகவல் சொன்னதன் மூலம் 108 ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டதாகவோ எனது விசாரணையில் தெரிவித்துள்ளனரா என்றால் இல்லை. 20 நபர்கள் தன்னை தாக்கியதாக அ.சா.1 மருத்துவமனையில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். முதலில் கட்டைக்கழி என்று மட்டுமே தெரிவித்துள்ளார் என்றாலும், இரும்பு கம்பி அல்லது இரும்பு பைப் என எதுவும் தெரிவிக்கவில்லை என்றாலும் சரிதான்.

எனது விசாரணையில் எதிரிகளுக்கும், வாதி குடும்பத்திற்கும் முன்விரோதம் எதுவும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டதா என்றால் இருதரப்பினருக்கும் இடையேயான

வாய்தகராறு தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் அளித்ததால் முன்விரோதம் என தெரிவித்தனர். அவர்கள் விரோதத்தை மனதில் வைத்து கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துவிட்டனர் என்றாலும் நான் அந்த புகாரை சரிவர விசாரணை செய்யாமலும், சம்பவ இடம் செல்லாமலும், சாட்சிகளை விசாரணை செய்யாமலும் வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் எந்த ஒரு குற்றச்செயலிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. மருத்துவ விசாரணையில் அ.சா.1 சாந்தி மூன்று நாட்கள் தொடர்சிகிச்சையில் இருந்ததற்காக ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.